உ
சிவமயம்



யாழ்ப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும்

மாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் சின்னத்தம்பி ஆனந்தக்குமாரசாமி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 05-07-2016

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும்
மாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் சின்னத்தம்பி ஆனந்தக்குமாரசாமி

(வெலிமடை, மாங்குளம் "இந்திரா ஸ்ரோர்" உரிமையாளர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**05-07-2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்





ஓங்கு புகழ் பெற்று எமதூரின் அணிகலனாய்

பொங்குமொழி பிரகாசித்த விடிவிளக்காய்

இல்லற வாழ்வில் நல்லறம் பேணி

எமக்கெல்லாம் வழிகாட்டியாய் உழைத்து

ஊண் தந்து உயர வைத்த

தங்க மனம் கொண்ட உத்தமராம்

அன்னாரின் பாதக்கமலங்களில்

இம்மலரைக் காணிக்கையாக்கி

வணங்குகின்றோம்



இங்ஙனம்


குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தோற்றம்
24-04-1940

மறைவு
05-06-2016

அமரர்

# சின்னத்தம்பி ஆனந்தக்குமாரசாமி

ஆண்டாண்டு தோறும் அமரர் அவர்களின் ஆத்மாவை
ஆதரித்து வழிபடுவதற்காக

## "திதி வெண்பா"

நல்ல ஊர் வழிகளெல்லாம் நாளுமே தாள் பதித்து
வல்லபேர் வழிகளெல்லாம் வாழ்ந்திட வாழ்ந்து காட்டி
இல்லறம் நீத்து ஆனந்தக்குமாரசாமி இறையோனை அடைந்த திதி – தமிழ்
சொல்லரும் வைகாசி மாத அமரபட்ச பிரதமை என்றே துதி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## விநாயகர் துதி

ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகந்தனை யானைக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

# பஞ்சபுராணம்

## தேவாரம்

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்சே வடியிணையே குறுகி னோமே.

## திருவாசகம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்; பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன்; அடியின்கீழ் இருக்க" என்றார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தி சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மா மணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க
நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சின்னத்தம்பி ஆனந்தக்குமாரசாமி அவர்களின் வாழ்க்கை வரலாறு

யாழ்ப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வெலிமடை மாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கள் சின்னத்தம்பி - இரத்தினம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும்; உயரப்புலம் ஆணைக்கோட்டையைச் சேர்ந்த அமரர்கள் அரியரத்தினம் - புவனேஸ்வரி தம்பதியினரின் மருமகனும் வசந்தாவின் அன்புக் கணவருமாவார். அன்னார் வைகாசி மாத அபரபட்ச பிரதமை (05.06.2016) அன்று சிவபதமடைந்தார்.

ஈழமணித்திருநாட்டின் சிகரம் என விளங்கும் யாழ்ப் பாணத்தில் சைவமும், தமிழும் செழித்தோங்கும் சித்தன்கேணி யில் உயர் வேளாளர் குலத்தைச் சேர்ந்த அமரர்கள் சின்னத்தம்பி இரத்தினம்மா தம்பதியினருக்கு வந்துதித்த எண்மரில் சிரேஸ்ட புதல்வனாம் திரு. ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் 24.04.1940 இல் பிறந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிரியாசக்தி, காலஞ்சென்ற அருந்தவநாதன், கமலாதேவி, தில்லைநாயகி, தேவகாரணி, சிவசுப்பிரமணியம், சண்முகநாதன் ஆகியோரை உடன்பிறந்த சகோதரர்களாகவும் காலஞ் சென்ற நித்தியானந்தன், இராம நாதன், பிறைசேர் அழகனார், சக்தி தாசன், விபுலாதேவி, அருந்ததி ஆகியோரை மைத்துண மைத்துணிகளாகவும் அமையப் பெற்றார். பெரியராசா என்ற செல்லப் பெயரோடு குடும்பத் தலைவனாகவும் விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக் கல்வியை சித்தன்கேணி கணேச வித்தியா சாலையிலும் உயர் கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பின்னர் கணக்கியல் ஆய்வாளராக கொழும்பில் படித்துக் கொண்டு இருக்கும் வேளையில் தம்பியார் சின்னராசா என்பவரை இழக்க நேரிட்டது. இச்சந்தர்ப்பத்தில் தந்தையாருக்கு உறுதுணையாக அவர் நடாத்திய வெலிமடை "இந்திரா ஸ்ரோர்" என்னும் வியாபார நிலையத்தை தனது தந்தையாருடன் திறம்பட நடாத்திவந்தார்.

இக்காலத்தில் 1977ம் ஆண்டு காலம் சென்ற உயரப்புலம் ஆணைக்கோட்டையைச் சேர்ந்த அரியரத்தினம் - புவனேஸ்வரி தம்பதியினரின் எழுவரில் ஐந்தாவது புத்திரி வசந்தாவை திருமணம் செய்து இல்லறம் நடாத்தி வந்தார்.

அன்னாரது துணைவியார் வழியிலும் கிருஷ்ணதாசன் - ரேவதி, குமாரதாசன் - பேர்லின், சிறிபத்மநாதன் (காலஞ்சென்ற கங்கா) ஸ்கந்தபூசணி, சிவதாசன் - சுபத்திரா, நளாயினி - அருணகிரி சிறீசண்முகதாசன் - ஷாமினி ஆகியோரை மைத்துணன் மைத்துணிகளாகவும் இணைத்துக் கொண்டுள்ளார்.

1983ம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தால் சொந்த ஊருக்குத் திரும்பி பின் மாங்குளத்தில் அதே இந்திரா ஸ்ரோர் என்னும் பெயருடன் வியாபார நிலையம் திறந்து தனது துணைவி யுடன் 31 வருஷம் சந்தோசமாக வாழ்ந்து வந்தார். அன்னாருக்கு 05.06.2016 ஞாயிற்றுக்கிழமை மாலை நேரம் திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் இவ்வுலகை நீத்தார். அவரது சொந்த ஊரான சித்தன்கேணி "லக்சுமி வாசம்" வீட்டில் அன்னாரது இறுதிக் கிரியைகள் நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர்களின் ஆறாத்துயர்

அன்பின் அண்ணா, ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு திடீர் என்று மறைந்துவிட்டீர்களே! உங்களது மறைவின் துயரம் இன்னமும் நீங்காமல் வேதனை சூழ்ந்திருக்கிறதே.

தந்தையாரின் மறைவிற்குப்பின் நீங்கள் தானே அந்தஸ் தானத்தில் இருந்தீர்கள். உங்களது அன்பும், பண்பும் நிறைந்த முன்மொழிகளை இனி எப்போ கேட்போம் அண்ணா. மின்னாமல் முழங்காமல் பெய்த மழைபோல் எந்தவொரு அசுமாற்றங்களும் இன்றித் திடீரென மறைந்துவிட்டீர்களே. உங்களது மறைவிற்குப் பின் வந்த அஞ்சலிகள், அலறி அழுத மக்களைக் கண்டபொழுது எமது குடும்பத்திற்கு மாத்திரமன்றி சுற்றியிருந்த மக்களுக்கும் நீங்கள் ஒரு நிழல் மரமாகத் திகழ்ந்ததை உணர்ந்தோம். எல் லோரையும் தவிக்கவிட்டு சென்றுவிட்டீர்களே அண்ணா.

அண்ணா இருக்கிறார். ஆசையாக கதைக்கலாம் என்ற எண்ணம் எழும்போதெல்லாம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உங்கள் அன்பான ஆறுதல் வார்த்தைகளைக் கேட்டு அக மகிழ்வோம். அந்த ஆசைகளை நிராசைகளாக்கிவிட்டு மறைந்துவிட்டீர்களே.

அண்ணாவைச் சந்திக்கலாம், அன்பு உபசரிப்பை ஏற்று ஆறுதல் வார்த்தைகளைக் கேட்கலாம் என்ற நினைவோடு உம் மிடம் வருவோமே. அந்த நினைவுகளைக் கனவுகளாக்கி மறைந்து விட்டீர்களே.

அன்று நாட்டில் நடந்த அசம்பாவிதத்தில் அகப்பட்ட அல்லோலகல்லோலப்பட்ட நீங்கள் காலனின் கைகளிலிருந்து தப்பிவிட்டீர்கள் என்று ஆறுதல் அடைந்தோம். இன்று அசம்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதம் அற்றநிலையில் காலன் உங்களைக் கவர்ந்து விட்டானே என்று கலங்குகிறோம். எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு விட்டீர்களே. சுற்றியுள்ள மக்களைக் கவர்ந்தீர்கள். மாண்புமிக்க மனிதராய் அடக்கத்துக்கும், எளிமைக் கும் எடுத்துக்காட்டாய் திகழ்ந்த உங்களை ஆண்டவன் அன்போடு தன்னிடம் அணைத்துக்கொண்டானோ. எம்முடன் இன்பமாய் பழகி இனிமையாய் வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்த உங்களது திடீர் மரணம் எம்மை பேரதிர்ச்சிக்குள்ளாக்கி துயரத்துக்குள்ளாக் கியுள்ளது. எப்போது இத்துயரிலிருந்து மீளப்போகிறோமோ? ஏங்கு கிறோம் எம் அண்ணாவே.

சகோதரர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பா...

*கண்டதும் கட்டியணைத்து முத்தமிடும் பெரியப்பா!*
*அன்று மட்டும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததேனோ!*

அன்று மாலை தொலைபேசி வழிமூலம் நெஞ்சுவலியால் அவதியுறுகிறீர்கள் என்று கிடைத்த செய்தி கேட்டு அதிர்ச்சியில் உறைந்திருந்தவேளையில் இடிவிழுந்தாற்போல் செய்தியொன்று செவிவழி பாய்ந்தது. இடிந்துபோனேன் அந்நொடியில்.

தங்கள் மாங்குளம் வாசஸ்தலத்திற்கு விரைந்தபோது மனது தேடியது உங்கள் வரவேற்கும் புன்னகை முகத்தையும், கட்டியணைக்கும் கரங்களையும் மட்டுமே. ஆனாலும் விழியில் பட்டதோ தங்கள் விழிநீர் காணிக்கைகளும், செவியில் பாய்ந்ததோ ஒலித்த சோககீதமும். மனது வெம்பித் துடித்தது.

ஓடிவந்து உள்ளே விரைய உங்கள் பேரன் கேட்டான் "அம்மா, ஏன் பாட்டா நித்தா கொள்கிறார்" என்று. பதில் சொல்ல முடியவில்லை. அவனுக்கு அக்கணத்தில் தெரியவில்லை நீங்கள் நிரந்தர உறக்கத்திற்குப் போய்விட்டீர்கள் என்று. ஓரிரு மாதங்கள் முன்பு தாங்கள் அவனை மடியில் வைத்து ஆனந்தமாக வியாபாரம் செய்தது அவனுக்கும் ஞாபகம் இருக்குபோலும்.

கருணை உள்ளம், உதவும் கரங்கள் கொண்ட பெரியப்பா எம்
குடும்பத்தினருக்கு மட்டுமல்ல, ஊரவருக்கும் கூடவே.
மாங்குளத்தால் தங்கள் வாசஸ்தலத்தைக் கடந்து செல்லும்போது
இன்னமும் பல உதடுகள் முணுமுணுப்பது
என் காதில் விழுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று தசாப்த காலமாக கிடைத்த இப்படியொரு

அற்புதமான மனிதன் போல் எவரும் இனி

மாங்குளத்திற்கு வரப்போவதில்லை என்று.

அந்நொடியில் உணர்ந்தேன் – நீங்கள்

அங்கு செய்தது வியாபாரமல்ல; சேவை என்று.

மனதில் பெருமிதம் அடைகிறேன் பெரியப்பா.

நீங்கள் என் சிறுவயது முதல் எனக்கு செப்பிய அறிவுரைகள் அனைத்தும் மனதில் வந்து செல்கின்றன. சாப்பாட்டில் மிச்சம் வைக்கக்கூடாது என்பது முதலாக, வாகனம் ஓட்டுவதில் கவனம் தேவை என்பது போன்ற எண்ணற்ற அறிவுரைகள் அவை. என் வளர்ச்சிப் பாதையில் என்றென்றும் ஆனந்தம் கண்டு, வெகுமதிகள் வாங்கித் தந்து, பாராட்டி வளர்த்து பெருமை கண்ட என் பெரியப்பா.

உங்கள் ஆத்மா சாந்தி பெற எல்லா வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**உங்கள் நினைவுகளுடன்**
**மகளாக சுகன்யா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள், மருமக்கள் நினைவில்...

பாசத்தின் ஒளிவிளக்காய்
பாரினில் அவதரித்தீர்.
வஞ்சமில்லா உம் நெஞ்சில்
வலிமையான இருதயநோய்
உட்புகுந்த காரணமோ
எம்மால் ஊகிக்க முடியவில்லை.

உம்பாச ஒளிக் கரங்களின்
ஈர்ப்பு சக்தியின் வல்லமைதான்
பெறாமக்கள் மருமக்கள் எமையெல்லாம்
இறுதி நொடியில் உம்மிடம் ஒன்றுகூடச் செய்ததேனோ
யாவருமே ஒன்றிணைந்து உங்களை
வழியனுப்பி வைத்தோமே
அதுதான் உம் இறுதிப் பயணமென்று
எம் மனங்கள் எண்ணவில்லை.

பெரியப்பா சித்தப்பா மாமா என்று
பெரியப்பா சித்தப்பா மாமா என்று
வாயார நாமும்மை
அழைத்திட்ட வாயதால்
அழுது அழுது உமை எண்ணி
ஏங்குகின்றோம் துரையே!

**பெறாமக்கள், மருமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்குளத்து முதலாளி

எங்கள் பெரியராசாச் சித்தப்பா எங்கள் அம்மம்மாவின் அண்ணனையும் தம்பியையும் என்றைக்கும் எங்களால் மறக்க முடியாது. குரும்பசிட்டி அப்புவும், சித்தன்கேணி அப்புவும் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவார்கள். ஏனோ நாமும் அவர்களுடன் அதிக அன்பு காட்டி நடந்து வந்தோம். அவர்கள் வீடு எங்கள் வீடு போல. சித்தன்கேணி ஆச்சியின் அந்தியேட்டி நினைவு மலரில் குறிப்பிட்டது போல புண்ணியவதியாக தருமவழி நின்று பலரையும் வழி நடத்தியதையும் ஆதரித்ததையும் தெரிவித்தவன் நான் என்பதற்கமைய பெரியராசாச் சித்தப்பாவும் வழிவழிப் பாரம்பரியத்தை மாங்குளத்தில் செய்திருப்பதை நான் நன்கு கண்டு கொண்டேன்.

எமக்காக இனியார் உளர் என்று அவரது மறைவின் போது பலரும் அழுது கூறியது இன்னும் என் காதில் ரீங்காரம் செய்கிறது. அவர் உயிர் பிரிந்த அன்றிரவு நான் சென்றதும் எங்கெல்லாமோ இருந்து வந்தவர்கள் கூறிய விபரங்கள் என்னை வாட்டியது.

ஊருக்கெல்லாம் உபகாரியாக இருந்த அன்னாரை வழியனுப்பி வைக்க ச் மாங்குளத்தில் இருந்து வந்த அவரது உண்மையான உறவுகள் என்றும் மறக்க முடியாது.

அவரது ஆத்மா சாந்தியடைய சித்தன்கேணி பிள்ளையார், சிவசிதம்பரேஸ்வரர், துறட்டிப்பன் அம்மாள், மாங்குளம் மாவடிப் பிள்ளையாரையும் வேண்டி நிற்கின்றேன்.

சாந்தி

**என்றும் அன்பும் பாசமும் மறவாத**

**மூளாய்வழிப் பெறாமகன்**

**தங்கமுகுந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியராசா சித்தப்பாவை என்றும் மறவோம்

யாழ் கொழும்பு போய் வரும் போதெல்லாம் எந்நேரமும் நடுச்சாமமாகிலும் சரி அவரை எழுப்பி அவருடனும் வசந்தாச் சித்தியுடனும் கதைத்து அவர் தரும் அன்புப் பொருளெல்லாம் பெற்று வருவது வழமை. அவரும் சித்தியும் சரி கொழும்பு வரும்போது எங்கள் இல்லத்துக்கு வந்து அளவளாவிச் செல்வது வழமை.

நான் அவரது இறுதி நிகழ்வின் போது நாட்டில் இல்லாத தால் அவரது பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தவில்லை என்ற உணர்வு என் மனத்தை நெருடுகின்றது.

**என்றும் மறவாத**

**த.சுகந்தன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நினைவுகளுடன் எம் வாழ்க்கை

தன் தாய் தந்தை உறவுதனை
எந்நாளும் கருதாது - எம்மை
பார்போற்ற வளர்த்தெடுத்த
உத்தமரும் இவரே.

கல்விக்கு வழிகாட்டி
தொழிலுக்கு உரம் ஊட்டி
காசுதனை அள்ளி வீசி
சிரமப்பட்டால் நான்
கரம் ஓங்கி வளர வைத்தவரும்,

என்னைப் போல பலருக்கு
தங்கள் காலில் தலை நிமிர்ந்து
நின்று தரணி போற்ற
வாழ வைத்த கடவுள்.

காலனவனுக்கு பொறுக்காமல்
கருணைக் கப்பலை
கரை சேர்த்து விட்டாலும்
காலம் முழுதும் உங்கள்
நினைவுகளுடன் எம்வாழ்க்கை.

**அன்புடன் - மு.சுபாஸ்,**
**துணுக்காய் வீதி,**
**மாங்குளம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தமரே! எங்கையா சென்றீர்கள்?

பட்டணத்தில் பிறந்தாலும்
பாமர மக்களை வாழவைக்க
வியாபாரம் எனும் பெயரில்
வித்தகனாய் பிறரை வாழவைத்த
உத்தமனே எங்கையா சென்றீர்கள்.


விருந்தோம்பலிலும் சிறந்த பண்பு
புன்னகையுடன் வரவேற்றல்
வரவேற்று வாழவைத்த பலரும்
வரலாறு சொல்லும் நேரத்தில்
வடிவான முகத்தை மறைப்பதற்கு
வந்துதித்தவன் யாரையா?

குழந்தைகள் முதல் பெரியோர் வரை
"முதலாளி" எனும் நாமம் கூறி
புதுப்பொலிவு காணும் நேரத்தில்
மங்கா மாங்குளத்தில் சிறப்புறவே
சேவை செய்து விண்ணைத் தொடுமளவில்
வியாபாரம் செய்யும் வேளையிலே
காவு கொண்டான் காலனவன்
மறப்போமா? எம் வாழ்வில்
நினைவுகளுடன் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

**திரு.திருமதி. ரவிச்சந்திரன்**
**ஆசிரியர்கள்,**
**மாங்குளம், காரைநகர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சின்னத்தம்பி ஆனந்தகுமாரசாமி

சித்தங்கேணி

உரிமையாளர் :- இந்திரா ஸ்ரோர்ஸ் வெளிமடை,

மாங்குளம்

## சி. ஆனந்தகுமாரசாமி அவர்களின் சித்தூர் வாழ்வை பற்றி சிந்திப்போம்

ஆனந்தகுமாரசாமி அண்ணாவின் மரண அறிவித்தலை உதயன் பத்திரிகையில் பார்த்ததும் எனது மனதில் அழுத்தமும் (கவலையும்) அவரது செயற்திறனையும் சிந்திக்க வைத்தது. இவரது தோற்றமானது உயரமானவரும் வெண் தலையும் சிரித்த முகமும் பெரியவர்களை கண்டதும் அவர் தனது தலையை சாய்த்து அவர்களுக்கு மரியாதை செலுத்துவதை ஒரு போதும் மறக்கமுடியாது.

ஒரு மாத காலத்திற்கு முன் எனது நண்பருடன் மாங்குளத்திற்கு ஒரு அலுவலகம் சென்ற பொழுது அன்று ஞாயிற்றுக்கிழமை கடைகள் பூட்டப்பட்டிருந்தது. எனது நண்பருக்கு தெரிந்தவரும் சொந்தக்காரரும் இருக்கிறார் என்று சொல்லி விட்டு தைரியத்துடன் அவரது கடையை தட்டி திறப்பித்த பொழுது அவர் எம்மை வரவேற்ற விதத்தை எனது நண்பர் வியந்து கூறியதை மறக்கமுடியாததால் அதனை நினைவுபடுத்துகிறேன்.

ஆனந்த அண்ணர் எமது கிராம இளைஞர் முன்னேற்ற கழக வளர்ச்சியில் தனது சாரிரத்தாலும், பணத்தாலும் செய்த சேவைகளை மறக்கமுடியாது ஏனெனில் அக்காலத்தில் பதவிகளை எதிர்பாராது செய்த அன்பர் என்பதே எனது கருத்து.

அன்னாரது ஆண், பெண் சகோதரர்கள் அன்னாருடன் பாசம் உடையவர்களாக இருந்தபடியால் இவருக்கு மதிப்பு, மரியாதை கொடுத்ததோடு இவருக்கு நேருக்கு நேராக பேசமுற்படுவதில்லை. (Face to Face) இவரது சகோதரன் சிவத்துடன் நெருங்கி பழகியபடியால் என்னால் மேற்கூறிய கருத்தை ஆதாரமாக சொல்லக்கூடியதாகவுள்ளது.

ஆனந்த அண்ணர் பெரியவளவு கோயில் பணியில் தனது காலத்தில் சாமி தூக்குவதில் முன்நிற்பவர் அவரது செயற்பாடுகள் அனைத்திற்கும் அன்னாரது தகப்பனார் அமரத்துவம் எய்திய மதிப்பிற்குரிய சின்னத்தம்பியும், அன்னாரது தாயாரும் ஒத்துழைப்பு கொடுத்தமை நான் அறிந்ததே.

**"மானிட வாழ்வு என்பது அடக்கம் "** அண்ணர் தன் வாழ் நாளில் அடக்கத்திற்கும் மரியாதைக்கும் ஓர் எடுத்துக்காட்டாக வாழ் நாளில் விளங்கினார்.

ஆனந்த அண்ணனின் அடக்கம் முத்தி பெற இறைவனை வேண்டுகிறேன்.

மரியாதையுடன் அன்பன்
சு. நீதிநேசன்.
077 - 057 - 5454

சு.நீதிநேசன்
நீதிவளவு
M.K. TRUST
KAR - JAF MAIN ROAD,
SITHANKERNY.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி யென்செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்த றிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத் தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முகதூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசெனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுங் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்
தல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே!

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகளால் அருளப்பெற்ற

# சிவபுராணம்

### (எட்டாந்திருமுறை)

திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும் பிறவிச் சூளும் தளை நீக்கி
அல்லல் அறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏக னனேகன் இறைவன் அடிவாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி;
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி;
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி;
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி;
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த், தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுவர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று

போற்றி புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி...



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1940 | 2016 |
| 04 | 06 |
| 24 | 05 |

மாங்குளம் மாவடி சித்திவிநாயகர் ஆலயபரிபாலன சபையின் முன்னைநாள் நிர்வாக
உறுப்பினரும் பிரபல வர்த்தகருமான

அமரர்

## சின்னத்தம்பி ஆனந்தகுமாரசாமி

அவர்களின் மறைவு எமக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்புக்கும் பண்புக்கும்
இலக்கணமாய்த் திகழ்ந்தீர்!
ஆதரவு மொழி பேசி
இன்முகத்துடன் வாழ்ந்தீர்!
நாளும் பழகிய நாட்களை
கனவாய் நினைப்பதா?
எங்கள் கண்ணீரை
உங்கள் பாதங்களில்
காணிக்கையாய் அர்ப்பணித்து
அஞ்சலி செய்கின்றோம்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது தூய ஆத்மா இறைவனடி சேர
மாவடி சித்திவிநாயகரை பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**பிரிவுத்துயரில்**
**மாங்குளம் மாவடி சித்தி விநாகர்**
**ஆலய பரிபாலனசபையினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்

24
-
04
-
1940



மறைவு

05
-
06
-
2016

சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம் ஆனைக்கோட்டை கிராமத்தை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் சின்னத்தம்பி ஆனந்தக்குமாரசாமி

(உரிமையாளர் இந்திரா ஸ்ரோஸ் மாங்குளம், வெலிமடை)

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்

சின்னத்தம்பி ஆனந்தக்குமாரசாமி அவர்களின்
திடீர் மரணச் செய்தி கேட்டு
அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரமும் அடைந்துள்ளோம்
எமது ஊர் மக்களுடன் உறவாடி சுகதுக்கங்களின்
பங்குபற்றிய உத்தமரே
உயரப்புலம் உத்துங்க விநாயகரின் மீளா அடியாராகவும்
உபயகாரராகவும் இருந்து ஆலய முன்னேற்றத்துக்கு
உதவிய தங்களை நினைந்து நினைந்து கண்ணீர் வழக்கிறோம்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்,
நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டு
அவரின் ஆத்மா சாந்தியடைய உயரப்புலம் அருள்மிகு உத்துங்க விநாயகரை
இருகரம் கூப்பி பிரார்த்திக்கின்றோம்.


ஆனைக்கோட்டை
08.06.2016

உயரப்புலம்
உறவினர்களும் நண்பர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அன்னையின் மடியில்
24 - 04 - 1940

ஆண்டவன் அடியில்
05 - 06 - 2016

சித்த்கேணியைப் பிறப்பிடமாகவும்
மாங்குளம், இரந்திரா களஞ்சியத்தை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர்.சின்னத்தம்பி ஆனந்தகுமாரசாமி

அன்பின் உறைவிடமாய்
அனைவருக்கும் நிழல் மரமாய்
துன்பம் நீக்கும் அருமருந்தாய்
தூய வாழ்வு வாழ்ந்த ஐயாவே!
நாங்கள் என்னபொருள் தொலைபேசியில்
கேட்டாலும் உடன் ஆலயத்திற்கு
அனுப்பி வைக்கும் அன்பு தெய்வமே
அவ்வுலகம் செல்ல ஆசையுற்றது ஏனோ!
பூவுலகில் பொன்னெழுத்தாய்
நின்று நிலைத்திருக்கும்
மம்மில் பிள்ளையாரின் நிழலில்
என்றும் நிலைத்திருப்பீர்கள்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


பிரிவால் துயருறும்

**அம்பகாமம் மம்மில் பிள்ளையார்**
**ஆலய பரிபாலன சபை தலைவர் - மு.நாகரத்தினம் குடும்பத்தினரும்,**
**ஆலய பரிபாலன சபையினரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்கள்...

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1940 |  | 2016 |
| 04 | | 06 |
| 24 | | 05 |

இந்திரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்

அமரர்

## சின்னத்தம்பி – ஆனந்தகுமாரசாமி

A9 வீதி மாங்குளம்

தவமென தரணியில் உதித்தவரே!
பாச மொழிகள் பேசி பண்பாய் வளர்ந்தவரே
பாரினிலே தவிக்கவிட்டு பாதியிலே சென்றதென்ன
உதயத்தின் அஸ்தமனம் உண்மையானதென்று
ஊமையாய்ச் சொல்கின்றோம்
விழியெனும் விருட்சங்கள் சொரியும்
கண்ணீர் புஷ்பங்கள் கண்ணீரில் கரைந்தாலும்
கலையாத நினைவுகளுடன்
ஆறாத்துயர் கொண்டு அழுது புலம்புகின்றோம்...

**இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**வர்த்தக சங்கம்**
**மாங்குளம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| | | |
|---|---|---|
| மலர்வு | | உதிர்வு |
| 24 | | 05 |
| 04 | | 06 |
| 1940 | | 2016 |

அமரர்

## சின்னத்தம்பி ஆனந்தகுமாரசாமி

(உரிமையாளர் இந்திரா ஸ்ரோஸ் வெளிமடை, மாங்குளம்)

எம்முடன் இன்பமாய் பழகி

இனிமையாய் வாழ்ந்து

இன்று எம்மை விட்டு

பிரிந்து சென்றது ஏனையா

உம் பிரிவு எம்மை

துயராய் வாட்டுகின்றது

இறைவனை வேண்டுகின்றோம்

உன் ஆத்மா சாந்தியடைய


ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

– பிரிவைப்பகிரும் –
சபாரட்ணம் ஜெயக்குமார்
(ஜெர்மனி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்



எமது குடும்ப விளக்கு இயற்கை எய்தியபோது உடன் வந்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் உடனிருந்து பலவகை உதவிகள் புரிந்த அன்புள்ளங்களுக்கும் தொலைத்தொடர்பாடல் மூலம் உள்ளூர், வெளியூரில் இருந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மற்றும் மாங்குளம் வைத்தியசாலை டாக்டர்கள், தாதி உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் ஆகியோருக்கும், மாங்குளம் வாழ் மக்களுக்கும், வர்த்தக சங்கத்தினருக்கும், கண்ணீர் அஞ்சலிகள், துண்டுப் பிரசுரம் மூலம் அச்சிட்டு வெளியிட்டவர்க்கும், மலர் வளையங்கள் சாத்தியோர்க்கும், இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டோர்க்கும், அந்தியேட்டி, வீட்டுக்கிரியை நிகழ்வுகளில் கலந்துகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளை இருகரம் கூப்பித் தெரிவிக்கின்றோம்.

**"லக்சுமி வாசம்"**
**வட்டு கிழக்கு,**
**சித்தன்கேணி.**



**குடும்பத்தினர்.**

**05-07-2016**

M.R.S பிறிண்டேர்ஸ், அராலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

※ சின்னத்தம்பி + ※ இரத்தினம்மா

↓

ஆனந்தக்குமாரசாமி

※ கிரியாசக்தி + ※ நித்தியானந்தன்

※ அருந்தவநாதன்

கமலாதேவி + இராமநாதன்

தில்லைநாயகி + பிறைசேர் அழகனார்

தேவகாரணி + சக்திதாசன்

சிவசுப்பிரமணியம் + விபுலாதேவி

சண்முகநாதன் + அருந்ததி

※ அரியரத்தினம் + ※ புவனேஸ்வரி

↓

கிருஸ்ணதாசன் + தேவகி

குமாரதாசன் + பேர்லின்

சிறிபத்மநாதன் + ※ கங்கா,

+ ஸ்கந்தபூசணி

சிவதாசன் + சுபத்திரா

வசந்தா

நளாயினி + அருணகிரி

சிறிசண்முகதாசன் + சாமினி

※ அமரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்விற்கு

தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களிற்கு நன்மை செய்வதும்தான்
எல்லா வழிபாடுகளினதும் சாரமாகும்.
தீமை செய்பவன் தனக்கும்
மற்றவர்களுக்கும் தீமை செய்கிறான்,
நன்மை செய்பவன் தனக்கும்
பிறர்க்கும் நன்மையே செய்கிறான்.
உடலும் உள்ளமும்
தூய்மையின்றி கோயிலுக்குப்
போவதும் இறைவனை
வழிபடுவதும் பயனற்றதாகும்.
நேர்மையுடனும் தைரியமாகவும்
பக்தி சிரத்தையுடனும்
வாழ்ந்தால் இறைவனை
அடைவது உறுதி.

**"நன்னெறியே இறைவணக்கம்"**

**- சுவாமி விவேகானந்தர் -**



M.R.S பிறிண்டேர்ஸ், அராலி. 0774080558

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org